செ.மு.எண்.64 ஆணையர் அலுவலகம்,
இந்துசமய அறநிலையத்துறை,
சென்னை 600 034.
நாள். 20.1.2010

## செய்திக் குறிப்பு – இந்துசமய அறநிலையத்துறை– நாள் 20.01.2010

சென்னை தீவுத் திடலில் 36வது அகில இந்திய சுற்றுலா பொருட்காட்சி நடைபெற்று வருகிறது. இந்துசமய அறநிலையத்துறை சார்பாக வடிவமைக்கப்பட்டுள்ள அரங்கத்தினை மாண்புமிகு இந்துசமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் இன்று (20.01.2010) பார்வையிட்டார். இந்துசமய அறநிலையத்துறை ஆணையர் திரு ப.ரா.சம்பத், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

இவ்வரங்கத்தின் முகப்பானது சுற்றுலாத்துறையால் தெரிவிக்கப்பட்டபடி Celebrating Diversities அதாவது வேறுபாடுகள் கொண்டாடுதல் என்ற கருவினை மிக அழகாக பிரதிபலிப்பதாக உள்ளது.

அருள்மிகு கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்குதல், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன், அய்யனார், திருப்பரங்குன்றம் சாளகரம் மற்றும் யாழி, பழநி மலைமீது முருகன் திருக்கோயில் என்ற அமைப்பில் முகப்பு அலங்கரிக்கப்பட்டுள்ளது. மேலும் அரங்கத்தினுள் வைக்கப்பட்டுள்ள படங்கள், காட்சிகள், அசையும், அசையா மாதிரிகள் இக்கருவினையே பிரதிபலிப்பதாக உள்ளது. மேலும் முக்கிய நாட்களில் சிறப்பு அம்சமாக திருக்கோயில் நடைபெறும் புறப்பாட்டினை போன்று சுவாமி அலங்கரித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வண்ணம் மாதிரி புறப்பாடு நடத்தப்படுகிறது. இவை முக்கிய நாட்களான குடியரசு தினம், மற்றும் வார விடுமுறைகளில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. மேலும் இவ்வரங்கத்திற்கு வருபவர்கள் அனைவருக்கும் இந்துசமய அறநிலையத்துறை சார்பாக திருக்கோயில் பிரசாதங்கள் வழங்கப்படுவது பொது மக்கள் வரவேற்பை பெரிதும் பெற்றுள்ளது.

20.1.10
கூடுதல் ஆணையர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9